பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 04 | ஞாயிற்றுக்கிழமை | 18.02.2024 | அதிர்வு 201

## மன்னாரில் சிறுமி கொலை: சந்தேகநபர் 48 மணிநேரம் பொலிஸ் காவலில் தடுப்பு

### நீதிமன்றம் அதிரடி உத்தரவு



(மன்னார் நிருபர்)

மன்னாரில் 10 வயது சிறுமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்

06▶



# தலதா மாளிகைக்குக் குண்டு வைத்தவர்கள் நாட்டை எப்படி மீளக் கட்டியெழுப்புவார்கள்?

## ஜே.வி.பியை மறைமுகமாகத் தாக்கிப் பேசிய சஜித் நல்லாட்சி உருவாக வேண்டும் என்றும் வலியுறுத்து



தலதா மாளிகை மீது குண்டு வைத்தவர்களால் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற பிக்குகள் ஆலோசனை பேரவையின் மாவட்ட மாநாட்டில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

06▶

# ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள கள்வர்கள் அற்ற கூட்டணி வேண்டும்

## சந்திரிகா அம்மையார் வலியுறுத்து

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்காக கள்வர்கள் அற்ற கூட்டணியொன்றை அமைத்தால் நல்லது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

பொதுக் கூட்டணியொன்று அமையவாய்ப்புள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றனவே என எழுப்பப்பட்ட கேள்விக்கு, ”சட்டப்பூர்வமாக ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது” – என்றார் சந்திரிகா அம்மையார்.



# யாழ்., கிளிநொச்சி அரச அதிபர்களின் பதவிக்காலம் ஒரு வருடத்துக்கு நீடிப்பு

## நாளை அமைச்சரவைக்குப் பத்திரம்






(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்களின் பதவிக் காலத்தை ஒரு வருடம் நீடிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட 06▶




இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில் கட்சியின் தலைவர்கள், ‘விட்டேனா பார்’ என மோதிப் பார்க்கத் தலைப்பட்டு விட்டனர் என்று தகவல்.

அதனால் விவகாரம் இரண்டு வருடங்களுக்கு மேல் இழுபடும் வாய்ப்புகள் அதிகம். வழக்குத் தீர்ப்பு வந்து தான் இனி விடயம் நகரும். அதனால் அதுவரை கட்சி தொடர்ந்து என் கையில் என்று மகிழும்

06▶



# உலக உணவுத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறையில் நிவாரணம்!

(எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 1,262 குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் நேற்று முன் தினம் நிவாரண பொதிகள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந் நிகழ்வின் தொடர்ச்சியாக இரண்டாம் கட்ட நிவாரண பொதிகள் நேற்று புளக் து மேற்கு 01, 02, சம் மாந்துறை 10, 11, 12, கருவட்டுக்கல் 01, 02 , வீரமுனை 01,02,03,04 ஆகிய பிரிவு கிராம மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிவாரணப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எஸ்.எம். எம் அஸ றுடீன், திட்டமிடல் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.என்.எம் சசீர், புவி, பிரிவுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.



# சட்ட பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு அமெரிக்க பிரதிநிதிகள் நாட்டிற்கு வருகை

இணையவழி பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட சட்டங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து கலந்துரை யாடுவதற்காக அமெரிக்க செனட் சபை யின் வெளியுறவுத் தொடர்புகள் குழுவின் சிரேஷ்ட தொழில்சார் பணிக் குழாமின் பிரதிநிதிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஆழமான தெளிவைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த பிரதிநிதிகள் குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி பிரதிநிதிகள், பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் ஆராயவும், இணையவழி பாதுகாப்பு சட்டம் உள் ளிட்ட அண்மைய சட்டங்களுடன் தொடர் புடைய சிக்கல்கள் குறித்து கலந்துரை யாடவும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்திக்கவுள்ள னர் என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது பதிவில் தெரி வித்துள்ளார்.

# சமாதான நீதிவான் நியமனத்திற்கான கல்வித் தகைமை மீண்டும் திருத்தம்




சமாதான நீதிவான் நியமனத்திற்கான கல்வித் தகைமை மீண்டும் திருத்தப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலை மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவினால் கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி சமாதான நீதிவான்களுக்கான கல்வித் தகைமை தொடர்பில் விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்தது.

இதன்படி, சமாதான நீதிவானாக நியமனம் பெறுவதற்கான நிபந்தனையாக கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், கடந்த 13 ஆம் திகதி நீதியமைச்சரினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த நிபந்தனையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, சமாதான நீதவான் நியமனத்தைப் பெறுவதற்கு கல்வித் தகைமையாக இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் பரீட்சைக்குத் தோற்றி, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 2 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்தக் கல்வித் தகுதியை பெற்றிராத ஒருவரை, பிரசித்தமான மதத் தலைவரோ அல்லது சங்கத் தலைவரோ சமாதான நீதிவானாக நியமிக்கப்படத் தகுதியானவரென பரிந்துரை செய்யும்பட்சத்தில் நீதியமைச்சருக்கு, அவரை சமாதான நீதிவானாக நியமிக்க முடியுமென புதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# கொரிய மொழி பரீட்சை தொடர்பில் பரவிவரும் விண்ணப்படிவம் போலி

இந்த ஆண்டுக்கான கொரிய மொழி பரீட்சை தொடர்பில் தற்போது சமூக வலைத்தளங்களில் பரவிவரும் விண்ணப்படிவம் போலியானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

கொரிய அரசாங்கத்தினால் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்களில் பரவி வரும் போலியான விண்ணப்படிவங்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டாம் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு கொரிய மொழி பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகப்பூர்வ வலைத்தளங்களில் விண்ணப்பப்படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தமாதம் 26 ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை கொரிய மொழி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வெளியிடப்படும் எனவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.





# 3,620 சங்குகளுடன் ஒருவர் கைது!

( வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் சட்டபூர்வமற்ற முறையில் கடல் சங்குகளை அடம்பன் பொலிஸ் பிரிவில் பதுக்கி வைத்திருந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் சங்குகளும் மீட் கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள் ளது.

இது தொடர்பாக பொலிஸார் தெரிவிக்கையில்,

“எங்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து அடம்பன் பொலிஸ் பிரிவில் நாயாற்றுப் பகுதியில் சங்கு உடைக்கும் இடத்தைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அனுமதிப் பத்திரமின்றி 70 மில்லிமீற்றருக்குக் குறைந்த 3 ஆயிரத்து 620 சங்குகளைத் தன் வசம் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெரியகரிசல் பகுதியைச் சேர்ந்த 50 வயதான நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.” – என்றனர்.

# மியன்மாரில் கைதான இலங்கை மீனவர்கள் 15 பேருக்கும் சிறைத் தண்டனைத் தீர்ப்பு!



மியன்மாரில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 15 பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

அவர்களில் இருவருக்கு மியன்மார் நீதிமன்றம் 5 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

மீன்பிடி படகுகளைச் செலுத்தியவர்களுக்கே 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 13 இலங்கை மீனவர்களுக்கு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள தாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பொது மன்னிப்பின் கீழ் மீனவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக தூதுவர் கூறினார். மீனவர்கள் நலமுடன் இருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மார் கடல் எல்லையை மீறி மீன்பிடி நடவடிக் கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 2 மீன்பிடி படகுகளுடன் 15 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் குழுவினர் கடந்த நவம்பரில் கற்பிட்டி மற்றும் நீர் கொழும்பு பகுதிகளுக்கு மீன்பிடிக்காக ரயன்புத்தா மற்றும் லோரன்ஸ் ஆகிய மீன்பிடி படகுகள் மூலம் சென்றுள்ள னர்.

மேற்படி மீனவர்கள் டிசம்பர் 2 ஆம் திகதி மியன்மார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர்.

# கென்யோன் தேக்கத்தில் மீன் பிடிக்க சென்ற நபர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

**(மஸ்கெலியா நிருபர்: செ.தி.பெருமாள்)**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள கென்யோன் நீர் தேக்கத்தில் மீன் பிடிக்க சென்ற வேளையில் நீரில் மூழ்கிய நிலையில் காணாமல் போனவர் இரண்டு நாள்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள ஹப்புகஸ்தனை தோட்டத்தைச் சேர்ந்த மூக்கையா கனகேஸ்வரன் என்ற இரண்டு குழந்தைகளின் தந்தை கடந்த 15 ஆம் திகதி தனது வீட்டில் இருந்து கென்யோன் நீர் தேக்கத்தில் மீன் பிடிக்க சென்ற வேளையில் நீரில் மூழ்கிக் காணாமல் போய் உள்ளார் எனக் கூறப்படுகிறது.

இது குறித்து அவரது மனைவி 16 ஆம் திகதி மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்றை பதிவு செய்தார் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

நீரில் மூழ்கிய நபரை தேடும் பணி விசேட படையினர் மூலம் முன்னெடுக்கப்பட்ட போதும் அவரது சடலம் கிடைக்கவில்லை. அதனால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு அவரது சடலம் நீர் தேக்க பகுதியில் மிதந்தது. அதனையடுத்து ஹட்டன் நீதிமன்ற பதில் நீதிவான் தமயந்தி நேரில் பார்வை இட்ட பின்னர் சடலம் கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நேற்று மதியம் கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சட்ட வைத்திய அதிகாரி முன் நிலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவிருந்ததாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# விவசாய பயிர் பாதுகாப்பு துப்பாக்கிகள் வவுனியாவில் 125 பேருக்கு விநியோகம்



**(வசந்தன்)**

வவுனியா மாவட்டத்தில் 125 பேருக்கு விவசாயப் பயிர்ப் பாதுகாப்புத் துப்பாக்கிகள் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் நேற்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

யுத்தத்தால் பாதிப்படைந்த வவுனியா மக்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் விலங்குகளால் விவசாய செய்கைக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக, பல விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் என்பன பாதிப்படைந்துள்ளன. இதனால் விவசாயிகளின் விவசாய செய்கைய்யை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 125 பேருக்கு இந்த விவசாயப் பாதுகாப்பு துப்பாக்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவை சேனாதிராஜா, அதையொட்டி தமது கைவரிசையைத் தொடங்கி விட்டார்.

தலைவர் என்ற முறையில் தற்போது கட்சி எதிர்கொள்ளும் சட்டச் சிக்கல்கள் குறித்தும், அதை எதிர்கொள்வதற்கான வழிவகைகள் குறித்தும் தீர்மானிப்பதற்காக என்ற கருத்தில், கட்சியின் பழைய மத்திய குழுவை வரும் வெள்ளிக்கிழமை (23 ஆம் திகதி) கிளிநொச்சியில் கூட்டப் பணித்திருக்கின்றார் அவர்.

வழக்கமாக வவுனியா, திருகோணமலை மற்றும் மன்னாரில் நடைபெறும் மத்திய குழுக் கூட்டத்தை இம்முறை சின்ன ஜமீனின் கிளிநொச்சியில் கூட்ட மாவை சேனாதிராஜா ஏற்பாடு செய்திருப்பது ஒத்திசைவு – ஒருங்கிசைவு விளையாட்டாகத் தென்படுகின்றது. பிரச்சினையை சுமுகமாக – இணக்கமாக – சமரசமாக – கலந்துரையாடி தீர்க்கும் நகர்வாக இது எனக்குத் தோன்றவில்லை.

இந்த நகர்வையொட்டி கூற வேண்டிய பல தகவல்கள் உண்டு. இன்னும் கூட்ட நோட்டீஸ் வெளிவரவில்லை. அதற்கு முன்னர் அவற்றை பற்றிப் பிரஸ்தாபிப்பது - Premature என்று எண்ணுகிறேன்.

எனவே அதற்காக ஓரிரு நாள்கள் பொறுத்திருங்கள்.

இந்தக் கூட்டம் குறிப்பிட்ட நாளில் நடந்தால், அது பெரும்பாலும் பயனற்ற தனி ஆவர்த்தனக் கச்சேரியாகவே நடந்து முடியும் என்பதுதான் என் முற்கூட்டிய ஊகம். பார்ப்போம்...!

\+ \+ \+

இலங்கையின் வடக்கில் சீனாவிற்கு கிட்டியது ஏன் இந்தியாவிற்குக் கிட்டவில்லை என இந்தியா ஆராய்கின்றது.

இந்தியா மற்றும் சீனாவின் கபடி விளையாடும் விளையாட்டு மைதானம் போல இலங்கை இன்று மாறிவிட்டமை ஒன்றும் புதிய விடயம் அல்ல.

இந்த நிலையில் தலைமன்னார் – இரமேஸ்வரம் இடையேயான கடலில் உள்ள தீடைகளின்பால் (மணல்திட்டுகளின்பால்) இரு நாட்டின் கவனமும் திரும்பியுள்ளதாகத் தெரிகின்றது.

உண்மையில் இது இந்தியாவிற்கு மிக சொற்ப தூரத்தில் அமைந்துவிட்ட பிரதேசம் என்பதனால் இந்தியா அது குறித்து அதிக கரிசனையும் கவனமும் கொள்வதில் தவறேதுமில்லை.

இப்பகுதியில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இராமர் பாலத்தை அண்டி, மொத்தம் பதினொரு தீடைகள் உள்ளன. இவற்றில் ஆறு இலங்கையின் கடற்பகுதியிலும், எஞ்சிய ஐந்தும் இந்தியக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் உள்ளன. இங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்றாவது தீடை சற்றுப் பெரியது. அங்கு ஏதோ கட்டமைப்புப் பணிகளில் இலங்கைக் கடற்படை ஈடுபடுவதாக ஒரு பேச்சு உண்டு.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வடக்கிற்கு வருகை தந்த சீனாவின் தூதுவர் இந்தக் கடல்பகுதியில் அதிக அக்கறை செலுத்தியமையோடு, இலங்கைக் கடற்படையினரின் படகுகளில் இலங்கையின் ஆளுகையில் உள்ள 4ஆவது தீடை வரையில் சென்று திரும்பியமை பற்றிய செய்திகளும் ஊடகங்களில் வெளிவந்திருந்தன.

இதேபோன்று தற்போது வடக்கிற்கு வருகை தந்துள்ள இந்தியத் தூதுவர் தலைமன்னார் கடலில் சீனத் தூதுவர் சென்று பார்வையிட்ட 4ஆவது தீடை அல்ல, குறைந்தபட்சம் 3 ஆவது தீடை வரையிலாவது சென்று பார்க்க அனுமதிக்கு விண்ணப்பித்தபோதும், அவருக்கு 2ஆவது தீடை வரையிலேயே செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இது, இந்தியாவின் கழுகு கண்ணிற்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தும் எனபதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

இதேநேரம் இந்த 3 ஆவது தீடை வரை நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போது இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகரில் ஒருவருமான எரிக் சொல்ஹெய்ம் கடந்த ஆண்டில் சென்று திரும்பினார் எனச் செய்திகள் வெளியான நிலையில் , மன்னார் தீவுக் கடலில் எரிவாயு உள்ளது என எரிக் சொல்ஹெய்ம் தகவல் வெளியிட்டதன் மூலம் அந்த விஜயம் பற்றிய தகவல் உறுதியானது.

இலங்கைத் திசையில் இந்தியாவிற்கு அண்மையான பிரதேசத்திற்கு இந்தியாவிற்கு அனுமதி மறுக்கப்படும் அதேநேரம், இந்தியா சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நாட்டிற்கு அனுமதி வழங்கியமை இராஜதந்திர நெருக்கடியை மேலும் வலுப்படுத்தும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

## தலதா மாளிகைக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஏனைய மதங்களுக்கும் பொருத்தமான இடம் வழங்கப்பட வேண்டும் என அரசமைப்பில் கூறப்பட்டுள்ள போதிலும், மிஹிந்தலை புனித பூமியில் அமைந்துள்ள மிஹிந்தலை ரஜ மகா விகாரையின் மின்சாரம் கூட துண்டிக்கப்பட்டுள்ளது.பௌத்த பிக்குகள் மேற்கொள்ளும் சமய சேவைகள் உட்பட ஏனைய சேவைகளையும் சூட்சமமாக நிறுத்த அரச கட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது. அந்த அரச கட்டமைப்பு மதப் பணிகளை ஒவ்வொன்றாக நிறுத்தி வருகின்றது.

தலதா மாளிகை மீது குண்டு வைத்தவர்களால் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாது. இந்த வன்முறைகள் சமூகத்திலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டு நல்லாட்சி உருவாக்கப்பட வேண்டும். குடும்பவாதத்தை இல்லாதொழித்து நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய அரசு உருவாக்கப்பட வேண்டும்.

பிரிவினைவாத பயங்கரவாதத்தைத் தோற்கடித்த பின்னர், அம்மரியாதை, கௌரவம் முப்படைகளுக்குச் செல்ல வேண்டும். ஆனால், அந்த மரியாதையையும் கௌரவத்தையும் ஒரு சில குடும்பங்கள் எடுத்துக் கொண்டன. அவ்வாறு எடுத்துக் கொண்டு, நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்து, நாட்டில் பொருளாதாரப் பயங்கரவாதத்தைச் செயற்படுத்தி நாட்டையே அழித்தார்கள். இதன் காரணமாக 90 பில்லியன் டொலர் மதிப்பிலான கடனில் நாடு மூழ்கியுள்ளது. இதன் காரணமாக தலா ஒருவர் 12 இலட்சம் ரூபா கடனில் இருக்கின்றார்கள்.

இவ்வருட தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் பொருளாதாரப் பயங்கரவாதிகளை விரட்டியடித்து நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய உண்மையான அரசை உருவாக்க முன்வர வேண்டும்.” – என்றார்.

## யாழ்., கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரச அதிபர திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கடந்த 12 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான அரச அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாதசுந்தரன் எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

மேற்படி இரண்டு அரச அதிபர்களுக்கும் மேலும் ஒரு வருடம் சேவை நீடிப்பு வழங்கவே நாளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் அமைச்சரவைக்கு உரிய பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கடந்த ஜனவரி மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த வேளையில் இரண்டு அரச அதிபர்களும் அமைச்சர் ஒருவரின் சிபார்சுடன் சேவை நீடிப்புக் கோரிக்கை சமர்ப்பித்தனர் என்ற செய்தி ஏற்கனவே வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் கடந்த 12ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தமக்குச் சேவை நீடிப்புக் கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையில் இன்று வரை தனது உத்தியோகபூர்வ வாகனத்தை மீளக் கையளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சந்தேக நபர் 48 மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டு கழுத்து நெரித்துப் படுகொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்த மன்னார் நீதிவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

தலைமன்னார் – ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமி நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அதே கிராமத்தில் உள்ள தென்னந்தோப்பில் வேலை செய்யும் திருகோணமலை, குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய சந்தேகநபரைப் பொலிஸார் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர் .

இதன்போது மன்னார் மாவட்ட பதில் நீதிவான் எஸ்.ஜெபநேசன் லோகு, பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு அமைய மேற்படி சந்தேகநபரை எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் பொலிஸ் தடுப்பில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸாருக்கு அனுமதி வழங்கினார்.

இந்தநிலையில் சந்தேகநபர் மேலதிக விசாரணைக்காகப் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குப் பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு வரப்பட்ட சிறுமியின் சடலம் காலை 10.30 மணியளவில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

பிரேத பரிசோதனை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி செல்லத்துரை பிரணவன், சிறுமி பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

இந்தநிலையில் சடலம் நேற்று பெற்றோரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



# ஐந்து மாவட்டங்களின் பங்கேற்புடன் கண்டியில் இமயமலைப்பிரகடனத்தின் 2ஆவது பயிலரங்கு

இமயமலைப் பிரகடனத்தின் அடிப்படையில் தேசிய உரையாடலுக்காக மாவட்ட ரீதியில் நடத்தப்படவுள்ள பயிற்சிப் பட்டறைகளுக்காக முன்னெடுக்கப்படுடன் ஐந்து பயலங்குகளின் இரண்டாவது பயிலரங்கு கண்டியில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த இரண்டு நாள் செயலமர்வு நேற்றுடன் நிறைவுக்கு வந்தது. இதில் கேகாலை, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, பதுளை ஆகிய ஐந்து மாவட்டங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். அத்துடன் சர்வமதத் தலைவர்கள் 34 பேரும் பங்கேற்றிருந்தனர்.

சிறந்த இலங்கைக்கான சங்கத்திலிருந்து களுபஹன பியரதன தேரர், வல்லத்தர சோபித தேரர் மற்றும் வாடுவே தம்மாவன்ச தேரர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். உலகத் தமிழர் பேரவையின் சார்பில் அமெரிக்காவைச் சேர்ந்த எலியாஸ் ஜெயராஜாவும் பங்கேற்று கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சங்கத்தின் சாாபில் விசாகா தர்மதாச மற்றும் அங்கத்தவர்களும், பங்கேற்றிருந்தனர்.

இந்த உரையாடலில் களுபஹன பியரதன தேரர் நாகர்கோட்டில் பிரகடனம் உருவாகிய வரலாற்றை உரைத்ததோடு, குறித்த பிரகடனம் சம்பந்தமாகக் காணப்படுகின்ற கட்டுக்கதைகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

அத்துடன், இந்த உரையாடல்களில் பல்வேறு ஆரோக்கியமான வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்ததோடு, ஈற்றில், பிரகடனத்தின் நோக்கம் மற்றும் உள்ளடக்கத்தைப் பலரும் ஏற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக முதலாவது பயிலரங்கு குருநாகல் மாவட்டத்தில் கம்பஹா, புத்தளம், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகக் கடந்த ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் இடம்பெற்றிருந்தது. அடுத்தபடியாக மட்டக்களப்பு, மாத்தறை மற்றும் வவுனியாவில் பயிலரங்குகள் இடம்பெறவுள்ளன. அதன் அருகில் உள்ள மாவட்டங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

இமயமலைப் பிரகடனத்தின் சிறப்பம்சங்கள் குறித்த உரையாடல்களை ஊக்குவிக்கும் வகையில், 150 சர்வமத குருமார்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களை ஒருங்கிணைப்பாளர்களாக பயிற்றுவிப்பதற்கான ஐந்து பயிலரங்குகள் திட்டமிடப்பட்டுள்ளன.

இதேவேளை, தேசிய உரையாடலில் மாவட்டம் தோறும் 5 சர்வமதத் தலைவர்களும் ஒரு சிவில் சமூக உறுப்பினருமாக மாவட்டத்திற்கு தலா 6பேர் பிரதிநிதித்துவப்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எது தமிழ்த் தேசியம்?

"இந்து சமுத்திரத்திலே இந்தியாவின் பாதுகாப்பு என்பது நியாயமானது. ஆகவே, சீன ஆக்கிரமிப்பையும் சீனா இங்கு தொடர்ந்து நிலைகொள்வதையும் நாங்கள் விரும்பவில்லை" - என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரை நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவின் பாதுகாப்புக் குறித்து தமிழர் பிரதிநிதியான சுமந்திரன் கவலைப்படுவது - கரிசனை கொள்வது - எல்லாம் நல்லதுதான். ஆனால் அதே இந்தியா தமிழர் தாயகத்தில் தமிழரின் பாதுகாப்பு, இருப்பியல், தனித்துவம் பற்றி எல்லாம் உண்மையில் கவலை - சிரத்தை - கரிசனை - கொண்டுள்ளதா என்று அதே சுமந்திரனிடம் அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் என்ற முறையில் கேட்க விழைகிறோம்.

தமிழர் தேசத்தில் - வடக்கில் - சீனர்களின் பிரசன்னம், ஈடுபாடு குறித்து இங்கு யாரும் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது கவலை அளிப்பதாக இந்தியத் தூதுவர் ஜா சுமந்திரனிடம் தெரிவித்திருக்கின்றார்.

தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இந்தப் பிரதேசத்தில் பாரம்பரியமாக - காலாதி காலமாக - பண்பாட்டு உறவுகள் ரீதியாக இருக்கும் தொடர்புகள், பரஸ்பர ஈடுபாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பிரதேசத்தின் மக்கள் பரம்பலை - குடிசனப் பரம்பலை மாற்றி அமைக்கும் வண்ணம் இங்கு அந்நிய தேசமான சீனாவின் பங்களிப்பு ஏன் வர வேண்டும்? அதற்கு ஏன் இடம் அளித்து தமிழர்கள் பார்த்திருக்கின்றார்கள்? - என்ற தொனியில் இந்தியத் தூதுவரின் கருத்து வெளிப்பாடு இருந்திருக்கின்றது.

அவரின் இந்தக் கேள்வி 'ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி' என்ற மனப்பாங்கில் இருப்பதை இந்தியத் தூதுவருக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நேரடியாக - முகத்தில் அடித்தாற்போல எடுத்துரைத்திருக்க வேண்டும். சுமந்திரனும் கூறவில்லை. ஏனையோரும் எடுத்துரைக்கவில்லை.

தமிழர் தேசத்தில் சீனப் பிரசன்னம், அதன் விளைவுகள் குறித்தெல்லாம் இந்தியா கவலைப்படுவது அதன் புவிசார் அரசியலுக்கும் நலனுக்கும் உட்பட்ட விடயமாக இருக்கலாம். இருக்கட்டும். ஆனால் இது விடயத்தில் ஈழத் தமிழர் தரப்பு காட்டமாக குரல் எழுப்பவில்லை, எதிர்ப்புக் காட்டவில்லை என்றெல்லாம் பேசுவதற்கான அடிப்படைத் தகுதியை இந்தியா இழந்து விட்டது என்பதை இந்திய தூதுவர் மறந்து போனமைதான் வேடிக்கை. அதனை சுமந்திரன் உட்பட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அவரிடம் சுட்டிக்காட்ட மறந்து - மறுத்து - நிற்பது அதனை விட வேதனை.

தமிழர் ஒரு தேசிய இனம், வடக்கும் கிழக்கும் அவர்களின் பூர்வீகத் தாயகம் என்ற குறிப்போடு - இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக என்ற பெயரோடு - அந்த ஒரே நோக்கத்தை வெளியே காட்டிக் கொண்டு, தனது புவிசார் நலனுக்காக ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை இலங்கை மீது வல்வந்தமாகத் திணித்தது இந்தியா. அந்தத் திணிப்புக்கு வசதியாக, தானும் நேரடியாக உதவி - ஒத்துழைத்து - வளர்த்த தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை இந்தியா தன் தேவைகளுக்கு மட்டும் சமயோசிதமாக பயன்படுத்தியது.

அதன் பின்னர் நடந்தவை வரலாறு. எல்லோருக்கும் தெரியும். தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை கங்கணம் கட்டி நின்று, இலங்கையுடன் கைகோர்த்து அழித்தொழித்தது இந்தியா.

யாருடைய நலனுக்காக - யாருடைய பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்காக இலங்கைக்குள் தலையிட்டு, சுமார் இரண்டரை வருடங்கள் லட்சத்துக்கும் அதிக துருப்புக்களை இறக்கி, பெரும் படை நடவடிக்கைகளை மேற்கொண்டு, பின்னர் ஒரு விடுதலைப் போராட்ட இயக்கத்தின் அழிப்புக்கு இலங்கையுடன் சேர்ந்து இந்தியா துணை நின்றதோ அந்த மக்களின் நலனை இன்று கைவிட்டு விட்டு, தெற்குடன் குசலம் விசாரித்து, தனது பூகோள நலனைப் பற்றி மட்டும் சிந்தித்து நிற்கின்றது இந்தியா.

எங்கள் மக்களின் நலனை - எங்கள் தாயகத்தில் எங்கள் குடிசன பரம்பல் ரீதியான தனித்துவத்தை காப்பாற்றுவதற்கு என்ற பெயரில் - சர்வதேச ரீதியில் ஒப்பந்தம் செய்து, அதில் தலையிட்டு விட்டு, எங்களை நட்டாற்றில் தவிக்க விட்டு, இப்போது பார்த்திருக்கும் இந்தியாவுக்கு, இந்த மண்ணில் அதன் நலன்களுக்காக நாங்கள் குரல் எழுப்பவில்லை என்று எங்களின் மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்துக் கேட்பதற்கு என்ன அடிப்படை - நியாயம் - துணிச்சல் - தகுதி - இருக்க முடியும்?

சிங்களத் தலைமைகளை வசை பாடுவது மட்டும் தமிழ்த் தேசியம் ஆகிவிடாது. எங்களைத் தங்களின் புவியியல் நலனுக்காகப் பலியாடுகளாக பயன்படுத்தி, கைவிடும் துரோகங்களையும் துணிச்சலுடன் சுட்டிக் காட்டும் தைரியமும் இருந்தால்தான் அது தமிழ்த் தேசியத் தலைமைத்துவம்.

# விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்தில் 10 பேர் பலி



விருதுநகர் மாவட்டம் ஆலங்குளம் அருகே பட்டாசு ஆலையில் நேற்று பிற்பகல் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 4 பெண்கள் உள்பட 10 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர்.

சிவகாசி கார்னேசன் பகுதியைச் சேர்ந்தவர் விக்னேஷ். இவருக்குச் சொந்தமான பட்டாசு ஆலை ஒன்று ஆலங்குளம் அருகே உள்ள ராமுத்தேவன்பட்டியில் உள்ளது. நாக்பூரில் உள்ள மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டுத் துறையின் அனுமதி பெற்று இயங்கும் இந்த பட்டாசு ஆலையில் 74 அறைகளில் பேன்ஸி ரக பட்டாசுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு சுமார் 150 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், இன்று காலை வழக்கம்போல் பட்டாசு தயாரிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். பிற்பகலில் ஓர் அறையில் பேன்ஸி ரக பட்டாசுகளுக்கு மருந்து வைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது, உராய்வு ஏற்பட்டு திடீரென வெடி விபத்து ஏற்பட்டது.

இதில், அந்த அறை முழுவதும் இடிந்து விழுந்தது. அதோடு, தீப்பொறி ஏனைய அறைகளுக்கும் வெடித்துச் சிதறியதால் அடுத்தடுத்த இருந்த 4 அறைகளிலும் வெடி விபத்து ஏற்பட்டு கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

இந்த விபத்தில், அந்த 4 கட்டடங்களிலும் பட்டாசு தயாரிப்பில் ஈடுபட்டிருந்த அப்பகுதியைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்தனர்.

தகவலறிந்த சாத்தூர், சிவகாசி, வெம்பக்கோட்டை தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து மீட்பு பணிகளில் ஈடுட்டனர். ஜே.சி.பி. இயந்திரம் மூலம் இடிபாடுகளில் சிக்கியிருந்த உடல்கள் மீட்கப்பட்டன. மேலும், 8 பேர் பலத்த தீக்காயம் அடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் மீட்கப்பட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த விபத்து குறித்து ஆலங்குளம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்த 10 பேரின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபா நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளர்.

முதல்வர் ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,

"இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவருக்கு ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

"விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பட்டாசு ஆலையில் நடந்த விபத்து குறித்து கனத்த இதயத்துடன் அறிந்தேன். இந்த கடினமான நேரத்தில், அவர்களுடன் துணை நிற்கிறேன். காயமடைந்த அனைவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டுகிறேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபா நிவாரணம் வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சோனியா காந்தியின் சொத்து மதிப்பு வெளியானது



இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தியின் சொத்து மதிப்பு 12 கோடியே 53 லட்ச ரூபாய் என்று வேட்புமனுத் தாக்கலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள மாநிலங்களவை தேர்தலில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து போட்டியிட சோனியா காந்தி வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

அதில், தனக்கு இத்தாலியில் குடும்ப பூர்வீக சொத்தில் பங்கு இருப்பதாகவும், அதன் மதிப்பு 27 லட்சம் ரூபாய் என்றும் தெரிவித்துள்ளார்.அதிலிருந்து தனக்கு வருமானம் வந்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கைவசம் 90 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக இருப்பதாகவும் சோனியா காந்தி தெரிவித்துள்ளார். தனது மொத்த சொத்து மதிப்பு 12 கோடியே 53 லட்சத்து 76 ஆயிரத்து 822 ரூபாய் எனவும் சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக காங்கிரஸ் தலைவராக செல்வப்பெருந்தகை நியமனம்



தமிழக காங்கிரஸ் தலைவராக செல்வப்பெருந்தகை நிய மிக்கப்பட்டுள்ளார். மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், காங்கிரஸ் தலைமை இந்த அறிவிப்பை வெளியிட் டுள்ளது.

தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்த கே.எஸ். அழகிரி, இந்த பதவியில் 5 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். கடந்த 25 ஆண்டுகளில் யாரும் இப்பதவியில் 3 ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது இல்லை. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கே.எஸ்.அழகிரியையும் மாற்ற வேண்டும் என்று மூத்த தலை வர்கள் பலர் தொடர்ந்து, டில்லி தலைமைக்கு அழுத்தம் கொடுத்து வந்தனர்.

இருப்பினும், 2019 மக்களவைத் தேர்தல், 2021 சட்டப் பேரவை தேர்தல், 2022 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் போன் றவற்றை தனது தலைமையில் சந்தித்து, கூட்டணியில் ஒதுக்கி இருந்த பெரும்பாலான இடங்களில் வெற்றியை பெற்றுக் கொடுத்தார். சத்தியமூர்த்தி பவனில் ஒரே ஒருமுறை மட்டுமே கோஷ்டி சண்டை நடைபெற்றுள்ளது. அதனால், டில்லி தலைமையும், அழகிரியை மாற்றும் விவகாரத்தில் தயக்கம் காட்டியதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில், தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக செல்வப் பெருந்தகையை அக்கட்சியின் தலைமை நியமித்துள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

“தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக செல்வப் பெருந்தகை நியமிக்கப்பட்டுள்ளார். உடனடியாக அவர் பொறுப் பேற்பார். தமிழக காங்கிரஸுக்கான கே.எஸ்.அழகிரியின் பங் களிப்பு பாராட்டுதலுக்குரியது. அதேவேளையில், சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவராக ராஜேஷ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கும் காங்கிரஸ் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு குறித்து பேசியுள்ள செல்வபெருந்தகை, “ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கேவின் நம்பிக்கைக் குரிய பாத்திரமாக செயல்படுவேன். இந்தியாவில் சமூக நீதி மீது நம்பிக்கை கொண்ட இயக்கமாக காங்கிரஸ் செய லபடுகிறது” என்று தெரிவித்துள்ளார்.

பூவை மூர்த்தி தலைமையிலான புரட்சி பாரதம் கட்சி மூலம் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியவர் கு.செல்வப் பெருந்தகை. 2006 சட்டப்பேரவைத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் முதல் முறையாக சட்டப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், பிறகு அக்கட்சியில் இருந்து விலகி பகுஜன் சமாஜ் கட்சியில் சேர்ந்து மாநிலத் தலைவரானார்.

அதன் பின்னர், காங்கிரஸ் கட்சியில் இணைந்து 13 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறார். 2 ஆவது முறையாக எம்.எல்.ஏவான அவர், சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலை வராக செயலாற்றி வந்தார்.

இந்த நிலையில், இப்போது தமிழக காங்கிரஸ் தலைவ ராக நியமிக்கப்பட்டுள்ளார்.





# இன்சாட்-3 டி எஸ் செயற்கை கோள் விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது

இந்தியாவினால் தயாரிக்கப்பட்டுள்ள இன்சாட்-3 டி எஸ் என்ற செயற்கை கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தசெயற்கைகோள்வானிலைமாற்றங்களைதுல்லியமாக கண்டறியும் திறன் கொண்டதென இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள் ளது.

இந்த செயற்கை கோள் வானிலை மற்றும் அனர்த்த எச்சரிக்கை தகவல்களை முன்கூட்டியே பெறும் வகையில் இந்த செயற்கைகோள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கை கோள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து நேற்று மாலை 5.35 க்கு விண்ணில் செலுத்தப்பட்டது.




**உரலார் கேள்வி :-குழம்பிய யாழ் இசை நிகழ்ச்சி பற்றி?**

**உலக்கையார் பதில் :-** யாழ் மக்கள் விலை பேசப்படுகிறார்கள் போல் தெரிகிறது. இதுநாள் வரை எம் மண்ணையும், மக்களையும் திரும்பிப் பார்க்காதவர்கள் எல்லாம், ரம்பை, ஊர்வசி, மேனகை சூழ நம் மண்ணுக்குள் உலா வரத் தொடங்கியிருக்கிறார்கள். அதுகூடப் பரவா யில்லை. நம் மண்ணிற்குள் வர விரும்பாத வர்களையெல்லாம் கெஞ்சிக் கூத்தாடி இங்கு



அழைத்து வந்திருப்பதாக வேறு அவர்கள் வெட்கமில்லாமல் அறிக்கைகள் விடுவதுதான் வேதனையாய் இருக்கிறது. பழையபடி சின்ன மேளங்கள் தொடங்கிவிட்டாற் போல் தெரிகிறது.

கையிலிருக்கும் 'ரிமோட் பட்டனை' தட்டினால், வலிய வந்து திரையில் ஆடப் போகிற நடிகை களை ஏதோ தவமிருந்து அழைத்து வந்தாற் போல் பாவனை காட்டித் தமது வியாபாரத்தைப் பெருக்கப் பார்க்கிறார்கள் சிலர்.

அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அவர்கள் விரிக்கும் வலைக்குள் விழ இத்தனை பேர் தயாராக இருக்கையில், அவர்கள் இக் கூத்தைத் தொடர்ந்து ஆடத்தான் போகிறார்கள். இத்தோடு இக் காரியம் முடிந்து விடப் போவ தில்லை. நமக்காகப் பாடுபட்டு நடிகைகளைக் கூட்டிவர, இன்னுமின்னும் எத்தனையோ 'தியா கிகள்' முன் வரத்தான் போகிறார்கள். இழிச்ச வாயன் கிடைத்தால் அவன் ல்தலையில் எல்லோ ரும்தான் மிளகாய் அரைப்பார்கள்.

கடவாய் ஒழுகப் பனைமரம் வரை ஏறியும் , உயிராபத்தை அறியாமல் 'பரண்களில்' ஏறிக் கூத்தாடியும் நின்று 'ஜொள்ளு' விட்ட ஆயிரக் கணக்கான இளையோரைக் கண்டு மனம் அதிர்ந்தது. நம் இளையோரைத் திசை திருப்பப் புதிய போதைவஸ்தைக் கண்டு பிடித்து விட்டார் கள். இனி அவ்வளவுதான்! தனி நாடாவது, தாய் மண்ணாவது, விடுதலையாவது எல்லாம் கனவாகி விடும் போல. காவல் நாய்களுக்குக் கறித்துண்டை எறிந்து அவற்றைத் திசை திருப் பினாற் போல, நம் இளையோரின் வேகந் திருப்ப சதைத் துண்டுகளைக் கொண்டுவந்து விட்டார்கள்.

இவற்றைத் தடுத்துக் காக்க வேண்டிய நம் தலைவர்கள் பதவிப்போட்டியில் சடுகுடு விளை யாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஓரி ருவர் கூட அக் கூட்டத்தினுள் இருந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பாவம், வீணாகச் சில அசட்டுப் பையன்கள் இந்த மண்ணிற்காக உயிரிழந்து விட்டார்கள்.

**சல்லடையார் சலிப்பு :-இரும்புக் கம்பியைக் காய்ச்சிக் குறி இழுத்து விட்டார் வாரிதியார். தேவைதான்!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- சில நேரங்களில் மிகக் கடுமையான வார்த்தைகளைப் பாவிக்கி றீர்கள் அது தேவைதானா?**

**உலக்கையார் பதில் :-** வலிக்க வேண்டிய வர்களுக்கு வலிக்காமல் விட்டால் மினைக்கட்டு எழுதி என்ன பயன் ?

**சல்லடையார் சலிப்பு :- அப்படிப் போடுங்கோ அரிவாளை....!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :-பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வு முயற்சிகள் பற்றிப் பாராட்டாமல், அவற்றை ஏன் எப்போதும் குறை சொல்லி வருகிறீர்கள்?**




(12ஆம் பக்கம் பார்க்க)

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

**உலக்கையார் பதில் :-** இதுவரை எத்தனையோ மாணவர்கள் சிறப்புப் பட்டத்திற்காகவும், எம்.ஏ., எம்.பில். பட்டங்களுக்காகவும் பி.எச்.டி. பட்டத்திற்காகவும் ஆய்வுகள் செய்து, தடிமன் தடிமனாக அவற்றைப் புத்தகங்களாகக் கட்டிப் பல்கலைக்கழக நூலகங்களில் அடுக்கி வைத்திருக்கிறார்கள். இதுவரை வந்த இத்தகைய ஆய்வுப் புத்தகங்களால் பட்டம் பெற்றவருக்கன்றி, தமிழுக்கு அல்லது தமிழருக்கு ஏதேனும் பயன் விளைந்திருந்தால் சொல்லச் சொல்லுங்கள். முழங்காலில் நின்று அவர்களை வணங்கத் தயாராக இருக்கிறேன்.

பயனில்லாத, தேவையற்ற வெற்று வார்த்தைகளைப் போற்றுகிறவனை, மனிதன் என்று சொல்லாதே! அவன் நெல்லுக்குள் வந்த பதர் போல மனிதருக்குள் வந்த பதர் என்று சொல்! என்கிறார் வள்ளுவர். (பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல். மக்கட் பதடி எனல்). எனக்குத் தெரிந்த அளவில் இவர்களின் ஆய்வுப் புத்தகக் கட்டுகள் எல்லாம் நூலகங்களின் புத்தக 'றாக்கை'களிற்குப்' பாரமாகக் கிடப்பதாய்த்தான் சொல்லப்படுகிறது. நிலைமை இப்படி இருக்க இந்த அநியாயத்திற்குப் பாராட்டு வேறு தேவையா?

**சல்லடையார் சலிப்பு :-எங்க கன நாளா ஒண்டையும் காணேல எண்டு நினைச்சன். வாரிதியார் திரும்பவும் கத்தி தூக்கத் தொடங்கீட்டார் போல. பல்கலைக் கழகத்தார் கேடயங்களைத் தேடிப் பிடிப்பார்களாக!**

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢

**உரலார் கேள்வி :- இசை நிகழ்ச்சிக்காக வந்த டான்ஸ் மாஸ்டர் கலாவிற்கு அஞ்சலி 'நோட்டீஸ்' ஒட்டியது பற்றி உங்கள் கருத்து?**

**உலக்கையார் பதில் :-** விருந்தினர்களை நாம் அவமரியாதை செய்தல் ஆகாது. அவமரியாதை செய்யும் படியாக விருந்தினர்களும் நடந்து கொள்ளக்கூடாது. என்னால் இவ்வளவுதான் சொல்ல முடியும்.

**சல்லடையார் சலிப்பு :- நறுக்கென்று நாலு வார்த்தை சொல்லி விட்டார் வாரிதியார்.**

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢

**உரலார் கேள்வி :- செயலாளர் பதவியை இருவருமாகப் பகிர்ந்து கொள்ளலாம் என்று முடிவு செய்த பின்பு, இப்போது யார் முதலாவதாகப் பதவியேற்பது என்று சண்டையாமே? தமிழரசுக்கட்சிக்குள் என்னதான் நடக்கிறது?**

**உலக்கையார் பதில் :-** விழுந்த மாட்டிற்கு எத்தனை முறைதான் சூடு போடுவது. சூடு போட்டாலும் அது எழுந்து நடப்பதாய்த் தெரியவில்லை. இவ்வவளவு பகிரங்கமாகவா பதவிக் காய்ச் சண்டை பிடிப்பார்கள்? வெட்கக்கேடு! உருப்படவேண்டுமென்றால் முதலில் கட்சியின் நிர்வாக அமைப்பைச் சரியான முறையில் ஒழுங்கு செய்ய வேண்டும். கட்சிக்காக மக்கள் என்ற நிலையை மாற்றி, மக்களுக்காகக் கட்சி என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

எந்தப் பதவியிலும் இருக்காத, பதவி ஆசையில்லாத, உண்மையான இனப்பற்றும், தீர்க்கதரிசனமும், அறிவாற்றலும் நிறைந்த, ஒரு சிலரைக் கட்சியின் வழிநடத்தல் குழுவாக நியமித்து (இன்று அப்படியாரும் இருக்கிறார்களா என்ன?) அவர்களுக்குக் கட்சிப் பதவிகளில் ஆள்களை அமர்த்தவும், நீக்கவும் அதிகாரம் கொடுத்துப் புதிய சட்டம் இயற்ற வேண்டும். கட்சிப் பதவிகளில் அமர்ந்திருப்போருக்கு நியமிக்கப்பட்ட சம்பளமன்றி வேறு வருமானம் இல்லாமல் செய்ய வேண்டும். அவர்களுக்கு வரும் சட்டப்படியான வருமானங்களைக் கட்சிக்கு ஆக்க வேண்டும். அப்படிச் செய்தால் 'செத்த நாயில் தெள்ளுக் கழறுவது போல' பலர் தானாகப் பதவிகளில் இருந்து கழன்று போவார்கள்.

இப்படியெல்லாம் நடக்க வேண்டுமென்று ஆசையாய் இருக்கிறது. அதற்கான காலம் வருமாற் போல் தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

**சல்லடையார் சலிப்பு - ஆசை இருக்கு அரசாள... அம்சம் இருக்கு ஆடு மேய்க்க....**

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢

**உரலார் கேள்வி :- மசூதியை உடைத்துக் கோயில் கட்டியதாய் இங்கே பலர் கொக்கரித்துக் கொண்டிருக்க, இஸ்லாமிய நாடான அபுதாபியிலும் அடுத்த கோயிலைத் திறந்து விட்டார்களே ?**

**உலக்கையார் பதில் :-** 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'



**சல்லடையார் சலிப்பு -'சங்கிக்குச்' சந்தோஷமாகத்தானே இருக்கும்....... ஹீ...ஹீ...ஹீ...**

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢

**உரலார் கேள்வி :- உங்களைக் கண்டித்து இத்தனை வாங்கு வாங்குகிறார்களே! உங்களுக்குக் கவலையே வராதா ?**

**உலக்கையார் பதில் :-** இதில் கவலைப்பட என்ன இருக்கிறது? அவர்களது கண்டிப்பில் உண்மை இருந்தால் நான் திருந்த வேண்டுமே தவிரக் கவலைப்படக் கூடாது. அவர்களது கண்டிப்பில் உண்மை இல்லாததிருந்தால் அதுபற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? மொத்தத்தில் இவர்களின் கண்டனத்தால் நான் கவலைப்படச் 'ச்சான்ஸ்ஸே' இல்லை. தவளையும் கத்தவேண்டியதுதான், மழையும் பெய்ய வேண்டியதுதான். அது அது, அது அது பாட்டுக்கு நடக்கட்டும்.

**சல்லடையார் சலிப்பு - யார் தவளை ? யார் மழை ?.......... ஹீ...ஹீ...ஹீ...!**

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢



# நீதிமன்றங்களுக்குள் முடங்கும் தமிழரசு?!



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைத் தமிழரசுக் கட்சியை தங்களின் தனிச் சொத்து என்று நினைத்து சிலர் கையாண்டதன் விளைவாக, அந்தக் கட்சி இன்று நீதிமன்றங்களுக்குள் முடங்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. தமிழரசுக் கட்சி எந்தக் குடும்பத்தினதும் முதுசம் அல்ல. அதுபோல, தனி நபர்கள் ஏகநிலையில் ஆளுகை செலுத்துவதற்கு அதுவொன்றும் ஆயுத இயக்கமும் அல்ல. தந்தை செல்வா தமிழரசுக் கட்சியை ஆரம்பிக்கும் போதே, ஜனநாயக மரபுகளைப் பேணும் வகையிலான யாப்பையும் சேர்த்தே இயற்றினார். அந்த யாப்புக்கு அப்பாலான ஒழுங்குக்குள்ளோ, நெறிக்குள்ளோ கட்சி ஒருபோதும் சென்றுவிடக் கூடாது என்பது அவரது எதிர்பார்ப்பு. கட்சியின் தலைவராக இருந்தாலும் சாதாரண உறுப்பினராக இருந்தாலும் கட்சியின் யாப்புக்கு இணங்க வேண்டும் என்பது ஜனநாயகத்தின் உச்சபட்ச பேணுகை. அவ்வாறான ஒழுங்கோடு இருந்த கட்சி யாப்புக்கு எதிரான தொடர் நடவடிக்கைகளின் விளைவினால் இன்று நீதிமன்றங்களுக்குள் முடங்கும் நிலை வந்திருக்கின்றது. அதுவும், நாட்டில் ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் வெகு சீக்கிரத்திலேயே நடைபெறவிருக்கின்ற நிலையில், தமிழ் மக்களின் முதன்மைக் கட்சி செயலற்ற நிலைக்கு செல்வது என்பது மிகப்பெரிய பின்னடைவாகும்.

தமிழரசுக் கட்சி புதிய தலைவரைத் தேர்வு செய்வதற்கான அறிவிப்பு வெளியான சமயத்தில், இந்தப் பத்தியாளரிடம் பேசிய அந்தக் கட்சியின் முன்னாள் இளைஞர் அணித் தலைவரான மன்னாரைச் சேர்ந்த சிவகரன், தமிழரசுக் கட்சி நீதிமன்றங்களுக்குள் முடங்கப் போகின்றது என்று எச்சரிக்கை விடுத்தார். இதே விடயத்தை அவர், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன் ஆகியோரிடமும் கூறினார் என அண்மையில் தன்னுடைய பேஸ்புக் பக்கத்தில் எழுதியிருந்தார். ”... தமிழரசுக் கட்சியின் யாப்புத் தொடர்பில் அந்தக் கட்சியின் ஒரு சில தலைவர்களைத் தவிர, யாருக்கும் எந்தத் தெளிவும் இல்லை. தாங்கள் நினைத்ததையெல்லாம் செய்துகொண்டு செல்கிறார்கள். பொதுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒருபோதும் 166 என்ற எண்ணிக்கையைத் தாண்ட முடியாது என்று யாப்பு வரையறுக்கின்றது. ஆனால், இன்றைக்கு 345 பேர் பொதுக்குழு உறுப்பினர்கள் என்ற நிலையில் தேர்தலில் வாக்களிக்கப் போகிறார்கள். மேலதிகமாக 179 பேர் வாக்களிப்பது என்பது மோசடிகளுக்கு வழிவகுக்கும். அதுவும், யாப்புக்கு எதிராக இந்த எண்ணிக்கை என்பது கட்சி உறுப்பினர்களின் உரிமையை மீறும் செயல். அதற்கு எதிராக நீதிமன்றங்களை நாட முடியும். அதனை தமிழரசுக் கட்சியின் சில தலைவர்கள் உணர்ந்து கொண்டாலும் அதனைப் புறந்தள்ளி நடக்கிறார்கள். இது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்...” என்றும் சிவகரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழரசுக் கட்சியின் தலைவராக சிவஞானம் சிறீதரன் தேர்வு செய்யப்பட்டமை, அதன் பின்னராக புதிய மத்திய செயற்குழு தேர்வு செய்யப்பட்டமை மற்றும் தேசிய மாநாட்டினை நடத்துவது என்பவற்றிற்கு எதிராக திருகோணமலை நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு தடை உத்தரவு பெறப்பட்டிருக்கின்றது. இன்னொரு வழக்கு, இறுதியாக இடம்பெற்ற மத்திய குழு மற்றும் பொதுக்குழு முடிவுகளை முறையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி யாழ்ப்பாண நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, தேசிய மாநாட்டுக்கான தடை உத்தரவு பெறப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு வழக்குகளைத் தாண்டி மேலதிகமாக இன்னும் சில வழக்குகள் எதிர்வரும் நாள்களில் தொடரப்படலாம் என்று தெரிகின்றது. இந்த வழக்குகளின் பின்னணியில் இருப்பது எல்லாமும் யாப்பினை மீறிய கட்சியின் நடவடிக்கைகள் என்பனவே. அதனை சரி செய்யாது கட்சி முன்னோக்கி பயணிப்பது என்பது அவ்வளவு இலகுவானது அல்ல.

தடை உத்தரவு பெறப்பட்டிருக்கின்ற தலைவர் தேர்தலில் வென்ற சிறீதரன், எந்தத் தடை வரினும் அதனை உடைத்தெறிவோம் என்ற தோரணையில் அண்மையில் கூறியிருக்கின்றார். தடைகளைத் உடைத்து எறிவது என்பது அரசியலில் முக்கியமானது. ஆனால், தடையின் தன்மைகள், அதன் பின்னணி தொடர்பாக எந்தத் தெளிவும் இல்லாமல், வாய்ச் சவடாலாக சொற்களை வீசுவது என்பது

தொடர்ச்சி ▼



# நீதிமன்றங்களுக்குள் முடங்கும் தமிழரசு?!

தொடர்ச்சி▲

அறிவுபூர்வமானது அல்ல. தற்போது நீதிமன்றத்தில் தமிழரசுக் கட்சி தொடர்பில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை வெற்றிகொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏதும் இல்லை என்று அந்தக் கட்சிக்குள் இருக்கின்ற ஜனாதிபதி சட்டத்தரணிகள் முதற்கொண்டு அனைத்துச் சட்டத்தரணிகளுக்கும் தெரியும். ஏனெனில், கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா தொடங்கி பலரினாலும் கட்சியின் யாப்பு தொடர்ச்சியாக மீறப்பட்டு வந்திருக்கின்றது. அவை சிறுதவறுகள் அல்ல. தொடர்ச்சியாக படுமோசமான தவறுகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. அப்படியான நிலையில், நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளுக்கு எதிராக வெற்றிபெறுவது சாத்தியமில்லை. மாறாக, நீதிமன்றங்களில் தலைகுனிந்து, யாப்பின் பிரகாரம் ஒழுகுகிறோம் என்று உறுதியளிக்க வேண்டும் என்ற நிலை இருக்கின்றது.

இல்லையென்றால், வழக்குகளைத் தொடுத்த தரப்பினருடன் நீதிமன்றங்களுக்கு வெளியில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தித்தான் பிரச்சினைகளை முடித்துக் கொள்ள முடியும். மாறாக, சவால் விடுப்பதோ, வாய்ச் சவடால் அடிப்பதோ எந்த வித நன்மையையும் கட்சிக்கு ஏற்படுத்தாது. அது கட்சியை வருடக் கணக்கில் நீதிமன்றங்களுக்குள் முடக்கி விடும்.அது, வீட்டுச் சின்னத்தில் மீது சவாரி செய்து பதவியைப் பிடிக்கலாம் என்று நம்பியிருக்கும் பலரின் எதிர்பார்ப்பை இல்லாமல் ஆக்கிவிடும்.

புதிய தலைவர் தெரிவு மற்றும் தேசிய மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றங்களில் பெறப்பட்டுள்ள தடை உத்தரவுகளினால், தன்னுடைய தலைமைப் பதவி காப்பாற்றப்பட்டிருப்பதாக மாவை சேனாதிராஜா மனதுக்குள் மகிழ்ந்து கொள்ளலாம். ஆனால், அதற்கான எந்த வாய்ப்புக்களும் இல்லை. ஏனெனில், கட்சியின் யாப்புக்கு எதிராக பொதுக்குழு உறுப்பினர்கள் அதிகளவானோர் நியமிக்கப்பட்டமை தொடர்பில் அவர் நீதிமன்றத்தில் பாரிய நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருக்கும். கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் அல்லாத பலரையும் தலைவருக்கான தேர்தலில் வாக்களிப்பதற்காக அழைத்தமை மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களாக முன்னிறுத்தியமை என்று பாரிய தவறுகளை அவர் இழைத்திருக்கிறார். அதற்கான பொறுப்பை அவர் நீதிமன்றத்தில் ஏற்க வேண்டிவரலாம்.

இந்த வழக்குகளைத் தொடுத்தவர்களின் நிலைப்பாடுகளை நோக்கும் போது, கட்சித் தலைவருக்கான தேர்தலில் நிறைய குளறுபடிகள் உண்டு. ஆனபோதிலும் கட்சியை ஒருங்கிணைந்து நடத்துவதற்காக விட்டுக் கொடுப்புக்களைச் செய்து, முன்னகர முயலும் போது, ஒருசில தனிநபர்களின் பதவி வெறிக்காக கட்சியை மீண்டும் மீண்டும் மோசடியான நிலைக்கு நகர்த்தும் வேலைகள் இடம்பெறுகின்றன. அவற்றை சகித்துக் கொள்ள முடியாத நிலையில் இந்த வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது. ஏற்கனவே, அறிவிக்கப்பட்ட மாதிரி தேசிய மாநாடு நடத்தப்பட்டிருந்தால், சிலவேளை இந்த வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்காது போயிருக்கலாம். சிறீதரன் தெரிவு, புதிய மத்திய செயற்குழு தெரிவு என்பன பொதுக்குழு அங்கீகரித்த பின்னரும் அதனை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை சிறீதரனும் அவரது அணியினரும் மேற்கொண்ட நிலையிலேயே, நீதிமன்றத்தினூடான நீதிக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது, பதவிக்காக கூச்சல் போட்டு கட்சியை முட்டுச் சந்தில் நிறுத்திவிட்டவர்கள், மற்றவர்கள் மீது அவதூறுகளைப் பரப்பும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனைத் தவிர அவர்களிடம் எந்த மாற்றுத் திட்டமோ, செயலூக்கமோ இல்லை.

தலைவர் தேர்தலில் சுமந்திரன் வென்றிருந்தால், அடுத்த வாரமே தேர்தல் முடிவுகளுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கும். அதற்கான ஏற்பாடுகளோடு தமிழரசுக் கட்சிக்குள் சிலர் தயாராகவே இருந்தார்கள். அவர்கள் அதனை வெளிப்படையாக அறிவிக்கவும் செய்தார்கள். அவர்கள்கூட எதிர்பார்க்காத வகையில் சிறீதரன் வென்றதனால், அவர்கள் அமைதியானர்கள். இப்போது, சுமந்திரன் வென்றிருந்தால் அதற்கு எதிராக வழக்குத் தொடர தயாராக இருந்த தரப்பினரும், கட்சியின் யாப்பில் ஏதாவது நெளிவு சுழிவுகள் இருக்கின்றனவா என்று யாப்பினை நன்றாக கரைத்துக் குடித்து வைத்திருப்பவர்களிடம் ஆலோசனை கேட்டு வருகிறார்கள். தான் வென்றிருந்தால் அந்த வெற்றிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருக்கும் என்பதுவும், பொதுக்குழு உறுப்பினர்கள் நியமனத்தில் யாப்பு ஒழுங்கு முறை பேணப்படவில்லை என்பது தொடர்பிலும் சுமந்திரன் ஏற்கனவே வெளிப்படுத்தி இருக்கிறார். அப்படியான நிலையில், கட்சியின் யாப்பு ஒழுங்காக பேணப்படவில்லை என்பதை சுமந்திரன் ஏற்றுக் கொண்டிருக்கிறார். அதன்மூலம், அவரும் கட்சி யாப்புக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஒத்துழைத்திருக்கிறார் என்பது

தொடர்ச்சி▼

# நீதிமன்றங்களுக்குள் முடங்கும் தமிழரசு?!




தொடர்ச்சி▲

தெளிவாகின்றது. அந்த நிலைப்பாடு, சம்பந்தனும், அவரின் பினாமி போல செயற்பட்ட மாவையும் கட்சி யாப்புக்கு எதிரான செயற்பாடுகளை தொடர்ச்சியாக செய்து வந்ததன் போக்கினை அங்கீகரிப்பதாகவே கொள்ள வேண்டும். கட்சிக்குள் எழும் கருத்து மோதல்களும் நிலைப்பாடு மாற்றங்களும் தமிழரசுக் கட்சியின் ஜனநாயகத் தன்மைக்கான எடுத்துக்காட்டு என்று ஊடகங்களிடம் பேசும் சுமந்திரன், கட்சியின் யாப்பு மீறப்படுகின்ற செயற்பாடுகளை கண்டும் காணாமல் விட்டமை என்பது அபத்தமானது. அத்தோடு, கட்சியின் யாப்புக்கு அமைவாக பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்வு இடம்பெற்றதன் பின்னர், தலைவருக்குரிய தேர்தலை நடத்துவதற்காக ஒத்துழைத்திருக்க வேண்டும். மாறாக, அவரும் ஏனோதானோ என்னு கடந்திருக்கிறார் என்பதுதான் அவரையும் இன்றைக்கு முட்டுச் சந்தில் இழுத்து விட்டிருக்கின்றது.

ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலுக்குள் முடங்கிப் போனதும், தமிழ் மக்களின் தலைவராக சம்பந்தன் உருவெடுத்தார். அவரை ஒரு சில கட்சிகளைத் தவிர, பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் மூத்த தலைவராக ஏற்று அவரின் கீழ் ஒன்றிணைந்தார்கள். ஆனால், அவரோ, கிட்டத்தட்ட ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவர் போன்று, தன்னுடைய நிலைப்பாடுகளை எடுத்தார். அதாவது, தான் எடுக்கும் முடிவுக்கு எதிராக யாரும் எதிர்வினை ஆற்றக்கூடாது. அப்படியான நிலைப்பாடுகளை எடுத்தால், அவர்களை தேர்தல்களில் தோற்கடித்து வெளியே தள்ள வேண்டும். அதற்காக, பலரையும் தமிழரசுக் கட்சிக்குள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சம்பந்தன் கொண்டு வந்தார். ஆனால், ஒரு கட்டம் வரையில் அவரின் செயற்பாடுகளை ஏற்றுக்கொண்ட கட்சியோ, கூட்டமைப்பினரோ இன்றைக்கு புறந்தள்ளும் நிலைக்கு வந்துவிட்டார்கள். அது, சம்பந்தனின் பதவி மோகம் மற்றும் தனிப்பட்ட குரோத மன நிலையின் விளைவால் ஏற்பட்டது. தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு சுமந்திரன் வரக் கூடாது என்பது தொடர்பிலான எண்ணத்தினை சம்பந்தன், 2020களிலேயே வெளிப்படுத்திவிட்டார். அதுபோல, திருகோணமலை தமிழரசுக்குள் சண்முகம் குகதாசன் செலுத்தும் ஆளுமையை அவர் இரசிக்கவில்லை. அப்படியான நிலையில், குகதாசன் கட்சியின் செயலாளராக தெரிவு செய்யப்பட்டதை அவரினால் ஏற்க முடியவில்லை. அதனால், கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு அவர் ஒத்துழைத்தார். குறிப்பாக, தலைவர் தேர்தலுக்கு வாக்களிப்பதற்காக தன்னுடைய அணியினர் ஆறு பேருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று சம்பந்தன் கோரியிருந்தார். அதற்கு, தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவும் இணங்கியது. இந்த ஆறு பேர் நியமனம் என்பது கட்சியின் யாப்புக்கு எதிரானது.

நாட்டில் எவ்வளவு பொருளாதாரப் பிரச்சினை இருந்தாலும், தமிழ் மக்களை பிரித்தாளுவதிலும் அதிகாரங்களைப் பறிப்பதிலும் தென் இலங்கை ஒருபோதும் பின்நிற்பதில்லை. இப்போது, அரசமைப்பில் 22வது திருத்தம் என்ற பெயரில், மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரங்களை மீளப்பெறும் பிரேரணையை உதய கம்மன்பில கொண்டுவந்திருக்கிறார். அவர், தேர்தல் வெற்றியை நோக்கி இந்தத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார். ஆனால், அந்தத் திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. ஏனெனில், அந்தத் திருத்தத்திற்கு எதிராக தென் இலங்கை இனவாதக் கட்சிகள் வாக்களிக்கும் வாய்ப்புக்கள் குறைவு. அப்படி வாக்களித்தால், அது அவர்களின் தேர்தல் வெற்றிகளைப் பாதிக்கும். இவ்வாறு சமய சந்தர்ப்பங்களைப் பாவித்து தென் இலங்கை இனவாத சக்திகள், தமிழர்களுக்கு எதிரான காய்களை நகரத்தும் போது பதவி வெறி, தனிப்பட்ட குரோதம் உள்ளிட்ட தீய எண்ணங்களினால் தமிழரசுக் கட்சி தன்னை கரைத்துக் கொண்டிருக்கின்றது. அது, தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகவே பார்க்கப்படும். வாய்ச் சவடால், குழுமன நிலை, ஏதேச்சதிகார சிந்தனைகளை கைவிட்டு, ஆக்கபூர்வமான பக்கத்திற்கு தமிழரசுக் கட்சியினர் நகரவேண்டிய இறுதிக் கட்டம் இது.

தமிழரசுக் கட்சி தற்போது விரைவாக செய்ய வேண்டியது, கட்சிக்கு எதிராக வழக்குகளை தொடுத்தவர்களுடன் நீதிமன்றத்துக்கு வெளியில் இணக்கப்பாடுகளை எட்டி, வழக்குகளை மீளப்பெற வைப்பது. அடுத்து, கட்சியின் யாப்பின் பிரகாரம் தெரிவுகளை மேற்கொண்டு ஒழுகுவது. இல்லையென்றால், தமிழரசுக் கட்சியை தமிழ் மக்கள் கைவிடும் சூழல் ஏற்படும். அப்போது, அந்தக் காட்சியைப் பார்த்து தென் இலங்கையின் இனவாதத் தரப்புக்கள் எக்காளமிட்டுச் சிரிக்கும்.

# விளாடிமிர் புடின் அரக்கன்: கனடா பிரதமர் விமர்சனம்





ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி மரணம் தொடர்பில் தகவல் அறிந்த கனேடிய பிரதமர் விளாடிமிர் புடின் ஒரு அரக்கன் என தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவல்னி ரஷ்ய அதிபர் புடினையும் அவரது கொள்கைகளையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் ஒருவர் ஆவார்.

இந்த நிலையில், அவர் நேற்று முன்தினம் திடீர் என சிறையில் உயிரிழந்தார்.

அவரின் திடீர் மரணம் தொடர்பில் உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

அத்தோடு, நவல்னியின் மரணத்தை புடினே பொறுப்பேற்க வேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் நேற்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், நவல்னியின் மரணச் செய்தியைக் கேட்ட கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, புடினை ஒரு அரக்கன் என்று அழைத்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள் ளன.

தொடர்ந்தும் அவர் கூறுகையில், "நவல்னியின் மரணம் ஒரு சோகம். ரஷ்ய மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடும் எவருக்கும் புடின் எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுப்பார் என்பதை இது காட்டுகிறது. நவல்னியின் மரணம் புடின் ஒரு அரக்கன் என்பதைக் காட்டுகிறது." என்று கூறியுள்ளார்.

அதேவேளை, மொஸ்கோவில் 10 நகரங்களில் இருந்து நவல்னிக்கு அஞ்சலி செலுத்த வந்த 100 இற்கும் மேற்பட்டோரை ரஷ்ய பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர் என தெரிய வந்துள்ளது.

# தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் இன்று விடுதலை செய்யப்படுகிறார்



தாய்லாந்து முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ரா இன்று விடுதலை செய்யப்படுவார் என தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் தெரிவித்துள்ளார்.

ஆட்சியில் இருந்தபோது முறைகேட்டில் ஈடுபட்டதற்காக தக்சின் ஷினவத்ராவுக்கு 2023 ஆகஸ்ட் மாதம் அவருக்கு எட்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

தக்சின் ஷினவத்ரா கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை தாய்லாந்தின் பிரதமராக இருந்தார்.

ஆட்சியில் இருந்தபோது முறைகேட்டில் ஈடுபட்டதற்காக தமக்கு சிறை தண்டனை விதிக்கப்படும் என்பதை அறிந்த அவர் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்த பின்னர் 15 ஆண்டுகள் வெளிநாட்டில் இருந்து விட்டு கடந்த ஆண்டு தக்சின் ஷினவத்ரா நாடு திரும்பினார்.

அதனைத் தொடர்ந்து 2023 ஓகஸ்ட் மாதம் பல குற்றச்சாட்டுகளின் கீழ் அவருக்கு எட்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், உடல்நலக் குறைவு காரணமாக அவர் பாங்காக் சிறையில் இருந்து மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், அவருக்கு விதிக்கப்பட்ட எட்டு ஆண்டுகள் சிறை தண்டனையை ஓராண்டாகக் தாய்லாந்து மாமன்னர் மகா வஜிராலாங்கோர்ன் குறைத்தார்.

எனவே, 74 வயதான தக்சின் ஷினவத்ரா இன்று விடுதலை செய்யப்படுவார் என தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





## புதிய சாளம்பைக்குளம் மக்களின் முறைப்பாட்டையடுத்து

# வவுனியா மாநகரசபையின் கழிவகற்றல் இடத்தை நேரில் சென்று பார்வையிட்டடார் ரிஷாத் பதியுதீன்

(வசந்தன்)

வவுனியா, புதிய சாளம்பைக்குள மக்களின் முறைப்பாட்டையடுத்து வவுனியா மாநகரசபையின் கழிவுகள் கொட்டப்படும் இடத்தினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரிஷாத் பதியுதீன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

வவுனியா மாநகரபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கழிவுகள் வவுனியா, பம்பைமடுப் பகுதியில் நீண்ட காலமாக கொட்டப்பட்டு வருகின்றன. இந்தக் கழிவுகளால் அதன் அருகில் உள்ள புதிய சாளம்பைக்குளத்தில் வாழும் மக்கள் தாம் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கழிவுகள் காற்று மற்றும் நீர் ஊடாகவும், கால்நடைகள் மூலமாகவும் தமது குடிமனைக்குள் வருவதாகவும் இதனால் நோய் தாக்கம் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் புதிய சாளம்பைக்குளம் பகுதிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனிடம் அந்த மக்கள் முறையிட்டடிருந்தனர்.

இதனையடுத்து, அந்தப் பகுதி மக்களுடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் கழிவுகள் கொட்டப்படும் இடத்தை பார்வையிட்டார், இது தொடர்பில் விரைவில் தீர்வைப் பெற்றுத் தருவார் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.













# தமிழரசிலிருந்து அதிருப்தியுடன் வெளியேறுவோர் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணிக்கு வரலாம்!

## அதன் யாழ் மாவட்ட இணை அமைப்பாளர்களான சர்வேஸ்வரன் கருத்து

(பிரபாகரன் டிலக்சன்)

ஒரிஜினல் தமிழரசுக் கட்சியினுடைய இறுதித் தலைவர்களாக சம்பந்தனும், மாவை சேனாதிராஜாவுமே இருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறுபவர்கள் எங்கள் கூட்டணியில் இணைவதற்கான வாய்ப்புகள் உள்ளன என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் யாழ் மாவட்ட இணை அமைப்பாளர்களான சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ் மாவட்ட இணைப்பாளர்கள் சந்திப்பு இன்று இடம்பெற்றது.

இதன்பின்னர் 'தமிழரசுக் கட்சியினுடைய மாநாட்டுக்கு நீதிமன்றம் இடைக்கால தடைவித்திருக்கின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?' – என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்ளக விடயங்கள் தொடர்பாக இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகம் பேசுவது சரியானது அல்ல. ஆனாலும் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிப்பது எனது கடமை.

அந்தவகையில் –

74 ஆண்டுகள் பாரம்பரியத்தைக் கொண்ட தமிழரசுக் கட்சியில் முதன் முதலாக தலைவருக்கான தேர்தல் பெரும் குளறுபடிகளுக்கு மத்தியில் இடம்பெற்றிருக்கின்றது.

தமிழரசுக் கட்சியினுடைய ஆரம்ப கால உறுப்பினர்களாக இருந்து வளர்ச்சியடைந்து வந்த அரசியல் தலைவர்களில் கடைசியாக உள்ளவர்கள் சம்பந்தனும், மாவை சேனாதிராஜாவுமே. விளக்கமாக சொன்னால் ஒரிஜினல் தமிழரசுக் கட்சியினுடைய இறுதித் தலைவர்களாக சம்பந்தனும் மாவை சேனாதிராஜாவுமே இருக்கிறார்கள். ஏனையவர்கள் பிற் காலங்களில் இடையில் வந்து சேர்ந்தவர்கள்.




இப்போது தலைவர் தேர்தலில் போட்டியிட்டவர்கள்கூட கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னரே கட்சிக்குள் வந்தவர்கள். தமிழரசுக் கட்சியின் கலாச்சாரம், பண்பாடுகளால் அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் அல்லர். 74 வருடங்களின் பின்னர் தலைவர் பதவிக்கு இருவர் போட்டியிடுவதற்கு இதுவும் காரணமாக இருக்கலாம்.

எந்தவொரு கட்சிக்குள்ளும் ஜனநாயக ரீதியில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது – குறித்த பதவிக்கு பொருத்தமான பலர் இருக்கின்ற போது போட்டித் தன்மை இருப்பது – என்பது ஆரோக்கியமானது.

ஆனால் பெரும்பாலான கட்சிகளில் பல விடயங்கள் உள்ளுக்குள்ளேயே பேசி தீர்க்கப்படுகின்றன. அமெரிக்க நாட்டில் கூட கட்சியின் உள்ளகத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில் தலைவர் பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுவது ஜனநாயக பண்பாகவும் நாம் ஏற்க முடியும்.

ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய தலைவர் தேர்தலானது கட்சியை இரு அணிகளாக பிளவுபடுத்தியிருக்கின்றது. தலைவர் தெரிவு செய்யப்பட்டதோடு பிரச்சினைகள் முடிந்து போகாமல் அது வலுவடைந்து நீதிமன்றம் வரை சென்று விசனத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

தமிழ்த் தேசிய போராட்டத்தில் இருக்கக்கூடிய சக்திகளுக்கு இது ஓர் ஆரோக்கியமான விடயம் அல்ல. தமிழரசுக் கட்சியினுடைய ஆதரவுத் தளத்தில் இருக்கக்கூடிய பலர் மனவிரக்தி அடைந்திருக்கிறார்கள். இது தமிழ் தேசிய நகர்வுகளை கொண்டு செல்வதற்கு தடையாக இருக்கும் என்ற கவலை எங்களுக்கு இருக்கின்றது – என்றார்.

"தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த பிளவானது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை வளப்படுத்தும் என நீங்கள் கருதுகின்றீர்களா?" – என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் –


எத்தவொரு கட்சியும் பலவீனப்படும் போது அல்லது கட்சிப் பிரச்சினைகள் அதிகரிக்கும் போது கட்சிக்குள் பிளவு வருவதோ அல்லது தங்களுக்கு பொருத்தமான கட்சிகளை நோக்கி உறுப்பினர்கள் நகர்வதையோ காணலாம்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் அங்கம் வைக்கக்கூடிய பல கட்சிகள் 30 வருட கால பாரம்பரியத்தை கொண்டவை. தமிழரசுக் கட்சிக்குள் பிரச்சினைகள் அதிகரிக்கின்ற போது, தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறுபவர்கள் எங்கள் கூட்டணியில் இணைவதற்கான வாய்ப்புகள் உள்ளன – என்றார்.

# கட்புலனற்றோர் வாக்களிக்க விசேட வசதி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கட்புலனற்றோர் வாக்களிக்க விசேட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாக தேசியத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேல்தல்களின் போது வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் உதவியுடனேயே தற்போது அவர்கள் வாக்களித்து வருகின்றனர் எனத் தேசியத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.



இந்த திட்டத்தின் கீழ் டீசயடைடந முறையில் அச்சிடப்பட்ட கட்சிகளின் பெயர்கள் மற்றும் வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய காகிதம் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான விசேட மாதிரி வேலைத்திட்டம் நேற்று முன்தினம் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பார்வையற்றோர் மற்றும் பார்வையற்ற சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு இந்த புதிய வேலைத்திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டு நடைமுறை சோதனையும் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் தேர்தலில் கட்புலனற்றோர், தனித்து வாக்களிக்கும் உரிமையை அனுபவிக்க முடியுமென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

# ஷிரான் பாஷிக்கின் உதவியாளர் கைது



போதைப்பொருள் கடத்தற்காரரான ஷிரான் பாஷிக் என்பவரின் உதவியாளர் ஒருவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தை ஹெவ்லொக்சிட்டி குடியிருப்பு தொகுதியின் வாகன தரிப்பிடத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தை ஹெவ்லொக்சிட்டி குடியிருப்பு தொகுதிக்கு முன்பாக உள்ள வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர், அந்த பகுதியில் பயணித்த மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியுள்ளார்.

எனினும், அதனை பொருட்படுத்தாது அந்த அதிகாரியை விபத்திற்குள்ளாக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், வெள்ளவத்தை ஹெவ்லொக்சிட்டி குடியிருப்பு தொகுதியின் வாகன தரிப்பிடத்தில் அதனை நிறுத்தி வைத்து விட்டு மற்றுமொருவருடன் தப்பிச்செல்ல முயற்சித்துள்ளார்.

இதன்போது, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். புத்கமுவ - அங்கொட பகுதியை சேர்ந்த 41 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 3 கார்களுக்கான சாவிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அந்த கார்களை சோதனைக்குட்படுத்திய போது 19 கிராம் ஹெரோயின், ஒரு தொலைபேசி, ஒரு மடிக்கணினி, 29 ஆயிரம் ரூபா பணம், 535 திராம் , 161 டொலர் என்பனவும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, டுபாய் அரசாங்கத்தால் நதின் பாஷிக் என்பவரின் பெயருக்கு வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், அடையாள அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமம் அடங்கிய பயணப்பை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது, தப்பிச்சென்ற நபர் ஷிரான் பாஷிக் என்பவரின் மகனான நதின் பாஷிக் என்பது தெரியவந்துள்ளது.

# கெஹலியவுக்கு மேலதிக சிகிச்சை மேற்கொள்ள மருத்துவர்கள் சிபார்சு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு மேலதிக மருத்துவ சிகிச்சை தேவை என வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இதற்கமைய, சிறைச்சாலை வைத்தியசாலையில் அவருக்கு தொடர்ந்தும் சிகிச்சைகள் வழங்கப்படுமென சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான மருத்துவ அறிக்கைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 7 பேரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் லோச்சனா அபேவிக்ரம அண்மையில் உத்தரவிட்டார்.

# மின் கட்டணம் தொடர்பான பிரேரணை மீளாய்வு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவுறுத்தல்

மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பான பிரேரணையை மீளாய்வு செய்து சமர்ப்பிக்குமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

திருத்தப்பட்ட பிரேரணையை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் இடம்பெற்ற மக்கள் கருத்துகளைக் கேட்டறியும் நடவடிக்கையின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, சுமார் 40 பேர் தமது யோசனைகளை சமர்ப்பித்த நிலையில், இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட கட்டணக் குறைப்பு வீதத்தை விடவும் அதிக வீதத்தில் கட்டணக் குறைப்பை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த விடயங்கள் அனைத்தையும் பரிசீலித்து, மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட யோசனையை மீள்பரிசீலனை செய்து திருத்தம் செய்ய வேண்டுமென பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போதைய மின்சார கட்டணத்தை 20 முதல் 25 வீதம் வரை குறைக்க முடியும் என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட மின் கட்டண திருத்தம் மற்றும் இலங்கை மின்சார சபையின் அண்மைய நிதிநிலை அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான மீளாய்வின் பிரகாரம் அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, மின் கட்டணத்தை அடுத்த மாதத்திற்கு முன்னதாக திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 18.02.2024



மேஷம்

இன்று சோர்வு மனப்பான்மையும் தேவையற்ற கவலைகளும் காணப்படும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்வது நல்லது.

பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் தவறுகளை கண்டுணர்ந்து அதனை சரிசெய்து கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்கள் துணையை புரிந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது.தேவையில்லாத செலவினங்களை சந்திக்க நேரும்.இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.



ரிஷபம்

இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும். விஷயங்களை யதார்த்தமாக கையாள வேண்டும். உடன் பிறந்தவர்களால் சில பிரச்சினைகள் நேரலாம்.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். சில சமயங்களில் நீங்கள் கட்டுப் பாட்டை இழப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

உங்கள் நிதிநலைமை மோசமாக இருக்கும். அதிகரிக்கும் செலவினங்கள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

மனஅழுத்தம் காரணமாக கழுத்தில் விறைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.



மிதுனம்

இன்று சவலான நாள். நல்ல இசையைக் கேட்பது, ஆன்மீக விஷயங்களில் ஈடுபடுவது போன்றவை நற்பலன்களை அளிக்கும்.

பணியிடச் சூழல் அதிருப்தியை அளிக்கும்.அது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் தீவிரம் காட்டுவீர்கள். நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை உருவாக்கலாம்.

இன்று போதிய அளவு பணம் இருக்காது. அதனால் பிறரிடம் கடன் வாங்க நேரும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காய்ச்சலினால் தொந்தரவு ஏற்படலாம்.



கடகம்

இன்று சாதகமான நாள். நற்பலனகள் கிடைக்கக் கூடிய நாள். முக்கியமான முடிவுளை இன்று எடுக்கலாம். குறைந்த முயற்சியிலேயே நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியில் வளர்ச்சி காணப்படும். உங்களின் பணிக்காக மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அதிக அன்பை வெளிப் படுத்துவீர்கள். இது உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள உதவும்.

இன்று நிதி வளரச்சி சிறப்பாக இருக்கும். இன்று உங்கள் சேமிப்பு உயரும். ஊக்கத் தொகை கிடைப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்களிடம் அதிக ஆற்றல் காணப்படும்.அதனால் தேக ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.



சிம்மம்

இன்று அதிர்ஷ்டமான நாள். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இன்று மனம் தெளிவுடன் காணப்படும். அதனால் பல நற்பலன்கள் காணலாம்.

நீங்கள் பணியை அனுபவித்து செய்வீர்கள். உங்கள் திறமைக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

வெளிப்படையான உணர்வுகளின் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இன்று வணிகத்தில் ஈடுபடுவதன் மூலம் லாபம் பெறலாம்.

இன்று நீங்கள் சுறுசுறுப்புடனும் திடமாகவும் காணப்படுவீர்கள்.



கன்னி

இன்று யதார்த்தமான அணுகுமுறை தேவை. வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் உங்கள் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்கள் பணி செயல்திறன் நன்றாக இருக்கும். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப்பெறுவீர்கள்.

நல்ல புரிந்துணர்வை வளர்ப்பதற்கு உணர்ச்சிவசப் படுதலை தவிர்க்க வேண்டும். துணையிடத்தில் சகஜமான அணுகுமுறை வேண்டும்.

செலவினங்கள்அதிகரித்து காணப்படும். தேவையில்லாத செலவினங்களை தவிர்க்க வேண்டும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவேண்டும். இன்று தொண்டையில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.



துலாம்

இன்று குறைந்த வளர்ச்சியே காணப்படும். சவால்கள் நிறைந்திருக்கும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவது இன்று கடினமாக இருக்கும்.

சகபணியாளர்களுடன் சுமுகமான உறவுமுறை காணப்படாது என்றாலும் பொறுமையுடன் கையாண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் கவனமற்ற மற்றும் அக்கறையற்ற பேச்சின் மூலமாக தவறான புரிந்துணர்வு ஏற்படும். அதனால் கவனமாக செயல்பட்டு நல்ல புரிந்துணர்வை உருவாக்க வேண்டும்.

பயணத்தின் பொழுது பணஇழப்பு நேரலாம்.கவனமாக கையாள வேண்டும்.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.



விருச்சிகம்

இன்று நம்பிக்கையோடு காணப் படுவீர்கள். நற்பலன்கள் கிடைப்பதற்கான நல்ல வாய்ப்புகள் உள்ளன. இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

உங்கள் பணி செயல்திறனில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்ளலாம்.இது இருவருக்கும் புத்துணர்ச்சி தரக்கூடியதாக இருக்கும்.

உங்கள் வீட்டுப்பெரியவர்களிடமிருந்த பணம் பரிசாக கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

நல்ல ஆரோக்கியம் காணப்படுகின்றது. ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 18.02.2024




உங்கள் முயற்சிகள் வெற்றியடை வதற்கு சாதகமான நாள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள்.

உங்கள் பணி செயல்திறன் பாராட்டத் தக்க வகையில் இருக்கும். உங்களின் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் ஆழ்ந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வை அனுபவித்து மகிழலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும்.உங்கள்சேமிப்பு நிலை அதிகரிக்கும். முக்கியமான முதலீடுகளுக்கு இன்று உகந்த நாள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். சாதகமான சூழ்நிலை உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.




உங்கள் அனுபவம் உங்களுக்கு நல்ல பாடத்தை கற்றுத் தரும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிக்கும்.

இன்று பரபரப்பான வேலைகள் காணப்படும். திட்டமிட்டு பணியாற்று வதன் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணை உங்களிடம் முரண்பட்டு இருப்பதாக உணர்வீர்கள். நட்பான அணுகுமுறை கொண்டு அவரை புரிந்து கொள்ள முயற்சி செய்வது நல்லது.

வீட்டுச் சீரமைப்புக்காக பணத்தை செலவு செய் வீர்கள்.இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும்.

சளி மற்றும்இருமல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். குளிர்ந்த பானங்கள் அருந்துவதை தவிர்க்கவும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பதற்கு உங்களிடம் தைரிய மும் உறுதியும் இருக்க வேண்டியது அவசியம். எதையும் இலேசாக எடுத் துக்கொள்ளும் போக்கு உங்களுக்கு நற்பலன்களைத் தரும்.

அதிகமான பணிச்சுமை காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள்.இதனால் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.கொடுக்கப்பட்ட பணிகளை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் அமைதியான அணுகு முறையைக் கையாண்டு நல்ல புரிந்துணர்வை உருவாக் கிக் கொள்ள வேண்டும். இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

பயணத்தின்பொழுது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




இன்று அனைத்து வகையிலும் முன்னேற்றம் காணப்படும்.உங்கள் முயற்சி மற்றும் உற்சாகம் மூலம் தொடர்ந்து வெற்றி கிடைக்கும்.

பணி சார்ந்த புதிய வாய்ப்புகள் ஆழ்ந்த திருப்தியை உருவாக்கும். பணியை அனுபவித்து செய்து மகிழ்வீர்கள்.

உங்கள் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை தக்க வைத்துக் கொள்வீர்கள்.

அதிக பணவரவு காணப்படும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்.

தேக ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது. மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக் கும்.










# சுற்றுலாத் தொழில்துறை தொடர்பில் ஆராய்வதற்கு தங்காலை – காலி பகுதிகளுக்கு ஜனாதிபதி விஜயம்

நாட்டின் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சி காரணமாக சுற்றுலா வலயங்களை அண்மித்த வசதிகளை மேம்படுத்துவது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தங்கல்ல முதல் காலி வரையுள்ள பல சுற்றுலாப் பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்திருந்தார்.

இதன்போது சுற்றுலா ஹோட்டல்களுக்குச் சென்ற ஜனாதிபதி அவை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது சுற்றுலாத் துறையினர் சுட்டிக்காட்டிய பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரிகளைத் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு உடனடியாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்த ஜனாதிபதி, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான யோசனைகளையும் கேட்டறிந்துகொண்டார்.



அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி சுற்றுலா வர்த்தகச் சமூகத்திற்கு அறிவுறுத்தியதன் பின்னர் புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக தங்களது வர்த்தகச் செயற்பாடுகளில் புதிய பரிணாமத்தை எட்டியிருப்பதாக வர்த்தகர்கள் இதன்போது சுட்டிக் காட்டினர்.

சீனிமோதர, திக்வெல்ல, நில்வெல்ல, ஹிரிகெட்டிய, வெலிகம, ஹபராதுவ பகுதிகளில் அமைந்திருக்கும் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் வெலிகம – அலைச்சறுக்கு பயிற்சி கல்லூரிக்கும் விஜயம் செய்து அதன் செயற்பாடுகளை ஜனாதிபதி நேரில் ஆராய்ந்தார்.

பின்னர் உடவடுன சுற்றுலா வலயத்தில் சுற்றுலாப் பயணிகளுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கான அவர்களது யோசனைகளையும் கேட்டறிந்துக்கொண்டார்.

அதனையடுத்து காலி – தங்காலை கடற்கரைகளில் கூடியிருந்த உள்நாட்டு சுற்றுலா பயணிகளுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, தனது வருகையை அறிந்து வீதியின் இரு பகுதிகளிலும் கூடியிருந்த மக்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.















# Wedding Show 2024 நிகழ்வின் பங்குதாரரானது செலான் வங்கி

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வான Wedding Show 2024இன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்குதாரராக செலான் வங்கி இணைகின்றது.

இந்த நிகழ்வு, மணப்பெண் ஒப்பனை கலைஞர்கள், உல்லாச விடுதிகள், புகைப்படக் கலைஞர்கள், நிகழ்வு முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் திருமணம் தொடர்பான பல தரப்பட்ட சேவைகளை வழங்கும் 250 இற்கும் மேற்பட்ட காட்சிகூடங்களை கொண்டுள்ளது.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமான இந்த நிகழ்வு இன்றும் இடம்பெறுகின்றது.

தமது வாழ்வின் மறக்கமுடியாத நன்னாளுக்கு தயாராகும் தம்பதிகள் மற்றும் குடும்பங்களுக்கு அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்குகிறது.

செலான் வங்கி, Wedding Show 2024இல் "விரைவில் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் தம்பதிகள்" மற்றும் வருகை தரவிருக்கும் குடும்பங்களின் தனித்துவ தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள பரந்த வங்கிச் சேவைகளை வழங்கவுள்ளது.

சேமிப்புக் கணக்குகளுக்கான சிறப்பு மெகா வெகுமதிகள், திருமணங்கள், பிரசவம் மற்றும் திருமண ஆண்டுகளின் போது நிதித்தொகை போன்ற சலுகைகள் ஊடாக வாடிக்கையாளர்களின் வாழ்க்கையில் இடம்பெறும் குறிப்பிடத்தக்க மைல்கற்களின் போது அவர்களுக்கு ஆதரவளிப்பதை வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது.

திருமணத் திட்டமிடல் செயல்முறை முழுவதும் மன அமைதியை உறுதிசெய்யவும் எந்தவொரு அவசர கால பணத் தேவையையும் பூர்த்தி செய்யும் முகமாக கடனட்டை சலுகைகள் மற்றும் தனிநபர் கடன் திட்டங்கள் ஆகியவற்றை ஆராயும் வாய்ப்பையும் பங்கேற்பாளர்கள் இந் நிகழ்வு மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பாக செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை உதவிப் பொது முகாமையாளர் ஆசிரி அபயரத்ன கருத்துத் தெரிவிக்கையில்,

"Wedding Show 2024இல் பங்குதாரர்களாக இணைவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தம்பதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் வாழ்வின் முக்கியதொரு நாளுக்காகத் தயாராகையில் அவர்களுக்கு பரந்த வங்கிச் சேவையை வழங்குவதன் ஊடாக தடையற்ற வங்கி அனுபவத்தை உறுதி செய்யவுள்ளோம். எங்கள் Mega Rewards விசுவாசத் திட்டம் மற்றும் விரிவான நிதித் தீர்வுகள் மூலம் தனிநபர்களுக்கு பணம் பற்றிய கவலையின்றி மறக்க முடியாத நினைவுகளை உருவாக்குவதில் உதவ நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் காட்சி கூடத்தில் பங்கேற்பாளர்களை வரவேற்கவும் அவர்களின் கனவுகளை நனவாக்க உதவவும் நாங்கள் தயாராகவுள்ளோம்." – என்றார்.







# இளம் தலைமுறையினரின் தகவல்களை வெளிக்கொணரும் Kantar Lighthouse 2023 அறிவுப்பகிர்வு நிகழ்வு முன்னெடுப்பு

Generation Z பற்றி வர்த்தக நாமங்களுக்கு இலகுவாக புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக, இலங்கையின் முன்னணி கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களுடன் வணிக மாநாட்டை Kantar ஸ்ரீலங்கா ஏற்பாடு செய்திருந்தது.

கொழும்பு, இலங்கை, பெப்ரவரி 2024 – முயுவேயுசு ஸ்ரீலங்கா தனது வருடாந்த அறிவு பகிர்வு நிகழ்வான KANTAR LIGHT HOUSE 2023 ஐ, சினமன் லேக்சைட் ஹோட்டலின் கிங்ஸ் கோர்ட்டில் ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையின் இளம் தலைமுறையினர், Gen Z பராயத்தினர் தொடர்பில் உள்ளார்ந்த தகவல்களை பகிர்ந்து கொண்டு, வர்த்தக நாமங்கள் தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் ஒட்டு மொத்த வியாபார கட்டமைப்புகளில் நிலவும் முக்கிய போக்குகள் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொண்டிருந்தது.

இந்த மாநாட்டில் இலங்கையில் பிரசன்னத்தைக் கொண்டுள்ள பல்வேறு வர்த்தக நாமங்களின் முன்னணி தலைமைச் செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

முயவெயச யீயுஊ இன் பிரதம நிறைவேற்று அதிகாரி லியுங் சியொங் தாய், முயவெயச தெற்காசியா, உள்ளார்ந்த தகவல் பிரிவின் நிறைவேற்று முகாமைத்துவ பணிப்பாளர் தீபேந்தர் ரானா மற்றும் முயவெயச தெற்காசியாவின் நிறைவேற்றுக்குழு ஆகியோர் நிகழ்வின் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், முயவெயச ஸ்ரீ லங்காவின் தலைமை அதிகாரி ஹிமாலி மதுரசிங்க குறிப்பிடுகையில், மக்களின் தற்போது நிலவும் மனநிலையை புரிந்து கொண்டு செயலாற்றுவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கியிருந்தார்.

அண்மைய வருடங்களில் தனிநபர்கள் எதிர்கொண்டிருந்த பல்வேறு அனுபவங்கள் தொடர்பில் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நடத்தைகளில் எவ்வாறு அவை தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன என்பது பற்றியும் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இதனால் வியாபாரங்களில் ஏற்பட்ட தாக்கம் என்பது தொடர்வதாக அமைந்திருப்பதுடன், மூன்கூட்டிய திட்டமிடல் அல்லது எதிர்பார்ப்பு போன்றன தொடர்பில் பெருமளவில் எதுவும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. சில துறைகள் நேர்த்தியான போக்கை காண்பித்திருந்தாலும், கடந்த காலங்களில் காணப்பட்ட சாதனை மட்டங்களை எய்துவதற்கான பயணம் என்பது படிப்படியானதாகவே அமைந்திருக்கும்." – என்றார்.

மதுரசிங்க விளக்கமளிக்கையில்,

"மேம்பட்டுவரும் சூழல்கட்டமைப்பில், நுகர்வோரின் புரிந்துணர்வு என்பதில் அதிகளவு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக, Gen Z ஐச் சேர்ந்தவர்கள் பணியாளர் குழுவினுள் ஒன்றிணைக்கப்படுவதனூடாக, பிரத்தியேகமான மற்றும் நடத்தை போக்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், வர்த்தக நாமங்களுக்கும் அவற்றின் காப்பாளர்களுக்கும் அதிகளவு சிந்தனையுடனான கவனத்தில் கொள்கையை வலியுறுத்துகின்றன. Kantar இன் அர்ப்பணிப்பை மீள உறுதி செய்து, இந்த சூழலில் பெறுமதி வாய்ந்த தகவல்களை பெற்றுக் கொடுப்பதில் நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்புடனான செயற்பாடு, தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்" – என்றார்.

Kantar APAC இன் பிரதம நிறைவேற்று அதிகாரி லியுங் சியொங் தாய், நிகழ்வில் ஒன்றுகூடியிருந்தவர்களுடன் கண்டறிந்த தகவல்களை பகிர்ந்திருந்ததுடன், APAC பிராந்தியத்தில் நிலவும் மூன்று போக்குகள் பற்றிய தெளிவுபடுத்தலை ஏற்படுத்தியிருந்தார். இந்த போக்குகளை அவர், குறைந்த அம்சங்களுடன் அதிகளவு செயற்பாடுகளை மேற்கொள்ளல், எதிர்காலத்துக்காக வர்த்தக நாமங்களை கட்டியெழுப்புவதற்கு பயின்றதை பகிர்வது மற்றும் சிறந்ததை மேற்கொள்வதனூடாக சிறப்பாக இயங்குவது போன்ற அம்சங்களை குறிப்பிட்டிருந்தார்.

தெற்காசிய உள்ளார்ந்த பிரிவின் நிறைவேற்று முகாமைத்துவ பணிப்பாளர் தீபேந்திர ரானா தமது உரையின் போது, KANTAR ,Ds; artificial intelligence I ஒன்றிணைப்பதன் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில், "KANTAR and Artificial Intelligence - Future is Here" எனும் தலைப்பில் விளக்கமளித்திருந்தார். AI இனால் மனித ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ள பங்காற்றப்படும் நிலையில், "Generative AI = Humanizing EI (Enhanced Intelligence)"க்காக இந்த தொழில்நுட்பம் எவ்வாறு திறவுகோலாக அமைந்துள்ளது என்பதை ரானா விளக்கியிருந்தார்.














# யூனியன் அஷ்யூரன்ஸ்ுடன் வயம்ப பல்கலை கைகோர்ப்பு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், வயம்ப பல்கலைக் கழகத்தின் காப்புறுதி மற்றும் விலை மதிப்பீடு திணைக்களம் ஆகியன புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக அறிவித்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு வயம்ப பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் ஆனிஃவ் மற்றும் வயம்ப பல்கலைக் கழகத்தின் உப வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் உதித் ஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டு, உடன்படிக்கையில் கைச்சாத் திட்டனர்.

பட்டம் பயிலும் மாணவர்களுக்கு சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது என்பது இந்த கைகோர்ப்பின் பிரதான இலக்காக அமைந்துள்ளதுடன், ஆயுள் காப்புறுதித் துறையில் பிரயோக அனுபவம் மற்றும் வெளிப்பாட்டை பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கின்றது.

இந்தப் பங்காண்மையினூடாக கல்விசார் உள்ளம் சங்களுடன் இணைந்த தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. நிபுணத்துவமான சூழலில் தமது கோட்பாட்டு ரீதியான அறிவை பிரயோகிக்கவும், உலகத்தரமான வாய்ப்புகள் வழங்குவதாகவும் அமைந்துள்ளது.கைகோர்ப்பு தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் ஆனிஃவ் கருத்துத் தெரிவிக்கையில்,

“ஆயுள் காப்புறுதித் துறையின் இளம் திறமைசாலிகளின் எதிர்காலத்தை சீரமைப்பதற்காக வயம்ப பல்கலைக்கழகத்துடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அடுத்த தலைமுறை தொழிற்துறை தலைவர்களை தயார்ப்படுத்தும் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு அவசியமான திறன்கள் மற்றும் அனுபவங்களை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பை இந்த கைகோர்ப்பு மேலும் உறுதி செய்துள்ளது.” என்றார்.

வயம்ப பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர். உதித் ஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

“யூனியன் அஷ்யூரன்ஸ் உடனான இந்த கைகோர்ப்பினூடாக எமது பட்டம் பயிலும் மாணவர்களுக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளோம். பிரயோக வெளிப்படுத்தல்களுக்கு அவர்களுக்கு வாய்ப்பளிப்பதுடன், தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மையையும் மேம்படுத்தியுள்ளது. கல்வி மற்றும் தொழிற்துறை ஆகியவற்றுக்கிடையே காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கு இவ்வாறான பங்காண்மைகள் முக்கியமானவை என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.” –என்றார்.

# மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் கைகோர்க்கும் Softlogic Life நிறுவனம்



இலங்கையின் 2 ஆவது பெரிய ஆயுள் காப்புறுதி நிறுவனமான Softlogic Life, ‘Softlogic Life Tech Wizards’ என்ற மூலோபாய திட்டத்தின் கீழ் மொரட்டுவை பல்கலைக் கழகத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையுடன் ஒத்துழைக்கும் முதல் காப்புறுதி நிறுவனமாக மாறியுள்ளது.

இது தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன், இது இலங்கை இளைஞர்களுக்கு டிஜிட்டல் மாற்றத்திற்கு வலுவூட்டுவதுடன், இலங்கையின் காப்புறுதித் துறையின் தொழில்நுட்ப பரிணாமத்தை முன்னெடுப்பதற்கு திறமையான புத்தாக்கங்களை ஈர்க்க Softlogic Life க்கு உதவும்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்து நிகழ்வில் Softlogic Life இன் முகாமைத்துவ பணிப்பாளர் இப்திகார் அஹமட், Softlogic Life இன் பிரதம டிஜிட்டல் புத்தாக்க அதிகாரி சாரங்க விஜயரத்ன, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.டி. குணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறையின் தலைவர் கலாநிதி உதயசங்கர் தயாசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கையின் எதிர்கால டிஜிட்டல் புத்தாக்கத் தலைவர்களை வடிவமைக்கும் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையின் காப்புறுதி நிறுவனம் ஒன்று இவ்வாறான மூலோபாய பங்காளித்துவத்தை உருவாக்கியுள்ள முதல் தடவையாக இந்த மைல்கல் கையொப்பமிடப்பட்டுள்ளது.